# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,492 — 1965 අගෝස්තු 27 වැනි සිකුරාදා — 1965.8.27

14,492 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு ஒகத்து மாதம் 27 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## விலைக்கட்டளைகள்

உணவு விலைக்கட்டளை இல. சி. 400. பால் உணவு.

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

173 ம் அத்தியாயமான விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் பிரிவினால் (உணவு) விலைக்கட்டுப்பாட்டதிகாரிக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு (உணவு), விலைக்கட்டுப்பாட்டதிகாரி பின்னதுவகே ஆதர் சில்வா ஆகிய யான் இக்கட்டளையால்—

(1) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே தகரப்புட்டிகள் டசின் ஒன்றை மொத்த வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய மொத்த விலையாகவும், நிகர தகரப்புட்டி ஒன்றை சில்லறை வியாபாரி ஒருவர் விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும், குறித்த அட்டவணையின் நேரொத்த பதிவில் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ரகப் பால் உணவுகள் இந்த விலைக்குக் கூடுதலாக இலங்கைத் தீவகத்துள் விற்றலாகாதெனவும், உடனடியாக நடைமுறையில் வருமாறும் விதிக்கிறேன்.

(2) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை ஒரு டசினைக் கொண்ட தொகையில் அல்லது அதிற்கூடிய தொகையில் ஒரு தடவையில் விற்றல் மொத்த விற்பனையாகவே கருதப்படுமென்றும் ;

(ஆ) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் ஒரு டசினுக்குக் குறைந்த எத்தொகையையாவது பாவிப்புக்காக அல்லது உபயோகத்திற்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படுமென்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(3) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் வேறொரு பொருளோடு கலந்து விற்றலாகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட எப்பொருளையேனும் தம்வசத்தில், அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில், இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலைகள், ஒரு அங்குல உயரத்திற்குக் குறையாத எண்களில்; விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக் கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) இக்கட்டளையின் நோக்கத்திற்காக " இருத்தல் " அல்லது " இரு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண இருத்தல் நிறையாகவும், " அவுன்ஸ் " அல்லது " அவு. " என்பது அவோர்டுபோஸ் எடுத்தலளவை முறையின் பிரமாண அவுன்ஸ் நிறையாகவும் கருதப்படுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) இக்கட்டளையால் ஆகக்கூடிய விலைகள் விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடப்பரப்பிலும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட பொருள் எதனையும் மொத்தமாக விற்கும் ஒவ்வொருவரும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருளைச் சில்லறையாக விற்கும் ஒவ்வொருவரும் அப்பொருளை வாங்குவோர் கேட்குமிடத்து அன்னாருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டு பற்றுச்சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த தேதி ;

(ஆ) விற்ற தகரப்புட்டிகளின் தொகையும், அவற்றின் சுத்த நிறையும் ;

(இ) விற்றதொகைகளுக்குக் கொடுத்த விலை ;

(ஈ) எவ்விதமான விற்பனை, அதாவது மொத்த விற்பனையா அல்லது சில்லறை விற்பனையா.

(7) குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் விபரிக்கப்பட்ட ஏதாவதொரு பொருள் விற்கப்படுமிடத்து, அட்டவணையின் 2 ம், 3 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக்கொடுக்கும் அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் அடங்கவேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

1965 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ந் தேதியன்று கொழும்பில் பிற்பகல் 3 மணிக்குக் கைபொப்பமிடப்பட்டது.

பி. ஆ. சில்வா,
விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு).

அட்டவணை

| பத்தி 1 பால் உணவு ரகம் | | பத்தி 2 ஒரு டசின் தகரப்புட்டிகளின் ஆகக்கூடிய மொத்த விலை | பத்தி 3 ஒரு தகரப்புட்டியின் சில்லறை விலை |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| நெஸ்பிறே | 1 இறா. | 35 75 | 3 10 |
| ஷை | 2½ இறா. | 86 50 | 7 45 |
| ஷை | 5 இறா. | 163 0 | 13 85 |
| எவ்விறிடே | 12 அவு. | 22 67 | 2 0 |
| ஷை | 3 இறா. | 86 0 | 7 45 |
| கிளிம் | 1 இறா. | 37 80 | 3 30 |
| ஷை | 2½ இறா. | 90 75 | 7 90 |
| ஷை | 5 இறா. | 170 10 | 14 85 |
| நோமட் | 1 இறா. | 35 50 | 3 10 |
| ஷை | 2½ இறா. | 82 21 | 7 20 |
| ஷை | 5 இறா. | 156 40 | 13 40 |
| அங்கர் | 5 இறா. | 126 0 | 10 75 |
| பேர்ன் லீவ் | 2½ இறா. | 72 0 | 6 30 |
| ஷை | 5 இறா. | 138 0 | 12 0 |
| கௌ அன் கேற் (சிவப்பு பசு) | 2½ இறா. | 72 0 | 6 25 |
| விடாஸ்பிறே | 1 இறா. | 32 85 | 2 80 |
| ஷை | 2½ இறா. | 75 50 | 6 50 |
| ஷை | 5 இறா. | 148 0 | 12 75 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருள்களை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருள்களை விற்கலாகாது.

8—1116

இலங்கை வாழைச்சேனை சுலோரண பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.